# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN JUNE / JULY - 2010

## ECS 1.21 – INTRODUCTION TO MACRO ECOMOMICS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. தேசிய வருமானம் பற்றிய பின்வரும் எண்ணக்கருத்துக்களை விளக்குக. அவற்றைக் கணிப்பீடு செய்தவற்கான சமன்பாடுகளையும் தருக.

அ) மொத்த தேசிய உற்பத்தி.

ஆ) தேறிய தேசிய உற்பத்தி.

இ) சந்தை விலைகளிலமைந்த தேசிய வருமானம்.

ஈ) காரணிச் செலவிலமைந்த தேசிய வருமானம்.

உ) நிலையான விலையிலமைந்த தேசிய உற்பத்தி.

ஊ) சந்தை விலையிலமைந்த தேசிய உற்பத்தி.

எ) செலவிடத்தக்க வருமானம்.

ஏ) தலா தேசிய உற்பத்தி.

(20 புள்ளிகள்)

02. அ) பேரினப் பொருளாதாரக் கொள்கைகளின் இலக்குகளை அடையாளப்படுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ) பொருளாதாரம் ஒன்றின் பின்வரும் தகல்களை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

$C = 20 + 0.8\ Yd$      $I =$ ரூபா 50 மில்லியன்

$G =$ ரூபா 20 மில்லின்      $Yd = Y - Tn$

$Tr = 0$ , $Tx =$ ரூபா 10 மில்லியன்      $Tn = Tx - Tr$

i. சமநிலைத் தேசிய வருமான மட்டம் எவ்வளவு?

ii. சமநிலை வருமானமட்டத்தில் நுகர்வையும் சேமிப்பையும் காண்க.

iii. சமநிலையில் உட்பாய்ச்சல்களின் பெறுமதி, வெளிப்பாய்ச்சல்களின் பெறுமதிக்குச் சமன் என்பதனை நிறுவுக.

(10 புள்ளிகள்)

03. அ) 'ஒடுங்கிய பணம்', 'விரிந்த பணம்' என்னும் பதங்களை விரிவாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) பணத்துக்கான கேள்வி வளையி தொடர்பான கெயின்ஸிய மற்றும் நாணயவியல் வாதிகளின் அணுகுமுறையை வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

இ) பணப்பெருக்கி என்றால் என்ன? அதனைக் கணிப்பீடு செய்வதற்கான சமன்பாட்டை தருவித்துக் காட்டுக.

(06 புள்ளிகள்)

04. அ) வணிக வங்கி ஒன்றின் கடனாக்கத் தொழில்பாட்டை எளிய உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) "வணிக வங்கிகளின் பிரதான பணிகள் இன்று மாற்றமடைந்து செல்கின்றன". இக்கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

(12 புள்ளிகள்)

05. சென்மதி நிலுவையில் தொடர்ந்தேச்சியான குறைநிலையினை எதிர்நோக்குகின்ற போது அதனை சரி செய்வதற்கு ஒரு நாடு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதனை, அண்மைக்கால இலங்கையினது நடவடிக்கைகளை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றைப் பேரினப் பொருளியல் எண்ணக்கருத்துடன் தொடர்புபடுத்தி வரைபட ரீதியாக விளக்குக.

அ) மொத்தக் கேள்வியும் மொத்த நிரம்பலும்.

ஆ) கேள்வித் தூண்டல் பணவீக்கம்.

இ) செலவுத் தூண்டல் பணவீக்கம்.

ஈ) முதலின் எல்லை விளைதிறன்.

(தலா 05 புள்ளிகள்)

07. 'இலங்கையின் மத்திய வங்கியினது பணி அண்மைக்காலத்தில் பெரிதும் முக்கியத்துவம் உடையதாக உணரப்படுகிறது'.

அரசாங்கத்திற்குத் தேவையான நிதி மூலங்களை மத்திய வங்கி எவ்வாறு பெற்றுக் கொள்கின்றது என்பது பற்றியும் அரசாங்கத்தினது ஆலோசகராக அது தொழில்படும் நிலையையும் விளக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக.

(அ) நாணய மாற்றுவீத நிர்ணயிப்பு.

(ஆ) GDP சுருக்கி.

(இ) நுகர்வோர் விலைச் சுட்டெண்.

(ஈ) மிதக்கும் நாணய மாற்றுவீதம்.

(தலா 05 புள்ளிகள்)

*****